DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.262/2025

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | முரளிதரன் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

(எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை **Date : 24.02.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பொன்னேரியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலைசெய்து வருகிறேன்.

கடந்த 03.09.2024ம் தேதி நானும் எனது தகப்பனார் அ.சா.1 செல்வராசும் எங்களுடைய XL இருசக்கர வாகனத்தில் தா.பேட்டை செல்வதற்காக கிளம்பினோம். XL இருசக்கர வாகனத்தை எனது தகப்பனார் ஓட்டினார். நான் பின்னால் அமர்ந்து சென்றேன். இரவு சுமார் 07.30 மணியளவில் நாமக்கல் டு துறையூர் சாலையில் பண்ணைக்காரண்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது TN 64 L 5942 பதிவெண்கொண்ட புல்லட் இருசக்கர வாகனம் அதே திசையில் எங்களுக்கு பின்னால் வந்து எங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்தில் எனக்கு கால் மற்றும் முதுகில் காயங்கள் ஏற்பட்டது. எனது தகப்பனாருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. புல்லட் வாகனத்தில் வந்த நபருக்கும் நெற்றியில் காயம் ஏற்பட்டது. அவரை எனக்கு அடையாளம் தெரியும். அவர்

நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

என்னையும், எனது தகப்பனாரையும், புல்லட் வாகனத்தில் வந்த நபரையும் ஆம்புலன்சில் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மேல் சிகிச்சைக்காக எனது தகப்பனாரை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்னர் விவேகானந்தா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நான் நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். புல்லட் வாகனத்தை ஓட்டி வந்தவர் அதிகபடியான வேகத்தில் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**